

முதலமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டத்திற்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிட 11.06.2023 அன்று வருகைதரவுள்ளதையொட்டி, கருப்பூர் அரசினர் பொறியியல் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள விழா முன்னேற்பாடு பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் (05.06.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், மாநகர காவல் ஆணையாளர் திருமதி பி.விஜயகுமாரி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சீ.பாலச்சந்தர் உட்பட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம், வீடூர் அணை நீர் தேக்கத் திட்டத்தின் புதிய தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள வழக்கறிஞர் ஜானகிராமன், குப்பன் மற்றும் சேட்டு (எ) பெரியசாமி ஆகியோர் உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடியை நேரில் சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றனர். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.இரா.இலட்சுமணன், செயற்குழு உறுப்பினர் பாஸ்கரன், ஒன்றியச் செயலாளர் மைதிலி இராஜேந்திரன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

ஒடிசா ரயில் விபத்தில் உயிர் இழந்தவர்களுக்கு - வழக்கறிஞர் கே.அசோகன் தலைமையில்

# திண்டிவனத்தில் - விழுப்புரம் வடக்கு மாவட்ட வழக்கறிஞர்கள் சார்பில் அஞ்சலி!

## பாங்கை ஜி.சேகர் - பி.வேலாயுதம் - ஆர்.சக்திவேல் - டி.மோகன சுந்தரம் முன்னிலை!

விழுப்புரம், ஜூன் 7 - ஒடிசா ரயில் கோர விபத்தில் உயிர் இழந்தவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகம், விழுப்புரம் வடக்கு மாவட்ட வழக்கறிஞர்கள் சார்பாக, விழுப்புரம் வடக்கு மாவட்டம், திண்டிவனம் நகரில் முன்னாள் ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட கழக துணை செயலாளர், வழக்கறிஞர் திண்டிவனம் கே.அசோகன் தலைமையில் மெழுகு வர்த்தி ஏற்றி மௌன அஞ்சலி அனுசரிக்கப்பட்டது. வழக்கறிஞர்கள் பாங்கை. ஜி.சேகர், பி.வேலாயுதம், ஆர்.சக்திவேல், டி.மோகன சுந்தரம் முன்னிலை வகித்தனர்.

ஒடிசா ரயில் கோர விபத்தில் உயிர் இழந்தவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க திராவிட முன்னேற்றக் கழக விழுப்புரம் வடக்கு மாவட்ட வழக்கறிஞர்கள்சார்பாக04.06.2003 ந் தேதி இரவு 7.00 மணியளவில் விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் நகரில் முன்னாள் ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட கழகதுணைச் செயலாளர் வழக்கறிஞர் திண்டிவனம் கே.அசோகன் தலைமையில் திண்டிவனம் நேருவீதியில் பழைய நீதிமன்ற வளாகம் அருகிலிருந்து வழக்கறிஞர்கள் கையில் மெழுகுவர்த்தி ஏற்றி ஊர்வலமாக சென்று வட்டாட்சியர் அலுவலகம் அருகில் ஆர்.எஸ்.பிள்ளை வீதி, கூட்டுரோட்டில் உயிர் இழந்தவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் திண்டிவனம் வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் பாங்கை.ஜி. சேகர், மாவட்ட வழக்கறிஞர். அணி துணை அமைப்பாளர் டி.மோகனசுந்தரம், நகர வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஆர்.சக்திவேல், நகர வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பி.வேலாயுதம் முன்னிலை வகித்தனர். ஊர்வலத்தில் வழக்கறிஞர்கள், முன்னாள் மாணவர் அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் எஸ்.பாபு, திண்டிவனம் பார் அசோசியேஷன்

துணைத் தலைவர் கே. சத்தியவேந்தன், மூத்த வழக்கறிஞர் செந்தாமரைக் கண்ணன், வன்னிப்பேர் எஸ். ஜெயச்சந்திரன், பரமேஸ்வரன், சந்திரன், இளவரசு, எஸ்.ஏ.செல்வநாயகம், எம்.யுவராஜ், டி. கே.ராஜ்குமார், சந்திரகுமார், ஞானகுரு, ஜி.எஸ்.கரண், நகர காங்கிரஸ் கட்சி வழக்கறிஞர் பொன். ராஜா மற்றும் நகர சிறுபான்மையினர். அணி அமைப்பாளர் சாதிக் பாஷா, நகர விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் கிளாசிக் ரமேஷ், மாஸ்டர் விஜயலட்சுமணன், நகர கழக துணை செயலாளர் தாஜூதீன், மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை தலைவர் எஸ்.சுகுமார், மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் ரயில்வே கோட்ரஸ் சங்கர், நகரமன்ற உறுப்பினர் ரேணுகா 'இளங்கோவன், மைலம் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் இளங்கோவன், கிளைக்கழக பிரதிநிதி பிரஸ் பழனி, டென்டல் தினேஷ் பாபு, ஹானஸ்ட் சுரேஷ், இறையானூர் டிரைவர் ராஜேஷ் மற்றும் ஏராளமான வழக்கறிஞர்களும், கழக முன்னோடிகளும் கலந்து கொண்டு ரயில் விபத்தில் உயிர் இழந்தவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தினார்கள்.

விழுப்புரம் மாவட்டம்

# மரக்காணத்தில் ரூ.4.45 கோடி மதிப்பீட்டில் சாலை விரிவாக்கப் பணி!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் துவக்கி வைத்தார்!

மரக்காணம், ஜூன் 7 - மரக்காணத்தில் ரூ.4.45 கோடி மதிப்பீட்டில் சாலை விரிவாக்க பணிக்குசிறு பான்மையினர்நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திட்டப் பணியை தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் தேன்பாக்கம் சாலை வரை உள்ள இதர மாவட்ட சாலையாகும்.

இச்சாலை திண்டிவனம் மரக்காணம் சாலையையும், கிழக்கு கடற்கரை சாலையையும் இணைக்கும் ஒரு முக்கியமான சாலையாகும்.

இந்த சாலை வழியாக கட்டுமானத்திற்கு தேவையான கருங்கல் ஜல்லி மற்றும் எம்.சாண்ட், பி. சாண்ட் அரவை செய்யும் தொழிற்கூடங்கள் அதிக அளவில் இந்த சாலையை ஒட்டியுள்ள பகுதிகளில் அமைந்துள்ளது.

இந்த பகுதியில் உற்பத்தியாகும் கருங்கல் ஜல்லி மற்றும் எம்.சாண்ட், பி. சாண்ட் ஆகியவை அருகிலுள்ள மாவட்டங்களான செங்கல்பட்டு, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் புதுச்சேரி மாநிலம் ஆகிய இடங்களுக்கு இந்த சாலை வழித்தடத்தில் எடுத்துச் செல்லப்படுகிறது,

மேலும், ஆண்டுதோறும் வடகிழக்கு பருவ மழை காலங்களில் அதிக அளவு மழை பெய்ததின் காரணமாக, போதிய மழைநீர் வடிகால் இல்லாததால் மழைநீர் தேங்கி, சாலையின் ஓடுதள பாதை பெரும்பாலான இடங்களில் பழுதாகி உள்ளது. ஆதலால் வாகன ஓட்டிகளுக்கு அதிக சிரமம் ஏற்படுவதுடன் பயணங்களில் காலதாமதம் ஏற்படுகிறது,

இதன்காரணமாகவே, மரக்காணம் தேன்பாக்கம் சாலை ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டு திட்டம் கீழ், ரூ.4.45 கோடி மதிப்பீட்டில் சாலை உறுதிப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இதில், ரூ.41.57 இலட்சம் மதிப்பீட்டில் 1.035 கி.மீ தூரம் சாலைப்பணியும், ரூ.23.86 இலட்சம் மதிப்பீட்டில் 2 எண்ணிக்கை கொண்ட சிறுபாலம் அமைக்கும் பணிகளும், ரூ.275.54 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் கால்வாய் அமைக்கும் பணிகள் நடைபெறவுள்ளது.

இதற்கான திட்டப் பணி துவக்க விழா மரக்காணம் பூமிஸ்வரர்கோவில் அருகில் நடைபெற்றது விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பழனி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் கலந்து கொண்டு திட்டப் பணியை தொடங்கி வைத்து

பணிவுகள் விரிவாக முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் எனவும் தெரிவித்தார்,

இந்நிகழ்ச்சியில், திண்டிவனம் சார் ஆட்சியர் கட்டா ரவி தேஜா,மாவட்டத் துணை செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் தயாளன், ஊராட்சி ஒன்றிய குழு துணைத் தலைவர் பழனி, நெடுஞ்சாலைத்துறை செயற்பொறியாளர் சிவசேனா, உதவி பொறியாளர் ராஜேந்திரன்,மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் செந்தில்பாலாஜி தலைமை இரா.மாணிக்கம் எம்.எல்.ஏ. வரவேற்புரை!

# கரூரில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பட்டிமன்றம்!

## திண்டுக்கல் லியோனி - முன்னணியினர் பங்கேற்பு!

கரூர், ஜூன் 7 - எத்தனை சோதனைகளை நடத்தினாலும் அவதூறுகளை வீசினாலும், கழக ஆட்சியை அசைக்க முடியாது என குளித்தலை பட்டிமன்றத்தில் திண்டுக்கல் ஐ. லியோனி பேசினார்.

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கரூர் மாவட்ட திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா சிறப்பு பட்டிமன்றம் குளித்தலை கடம்பர் கோவில் அருகில் நடைபெற்றது. மாவட்டக் கழக செயலாளரும் அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி தலைமை வகித்தார்.

குளித்தலை நகரக் கழக செயலாளர் குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா மாணிக்கம் வரவேற்புரையாற்றினார். திராவிட மாடல் ஆட்சிக்கு பெரிதும் வழிகாட்டுவது, டாக்டர் கலைஞரின் கலைப்பணியே, அரசியல் பணியே, என்ற தலைப்பில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ. லியோனி நடுவராக இருந்து பட்டிமன்றம் நடைபெற்றது. கலைப்பணியே என கவிஞர் இனியவன், நாக நந்தினியும் அரசியல் பணியே என விஜயகுமார், கோவை தனபால் ஆகியோரும் பேசினர்.

திண்டுக்கல்ஐ. லியோனி பட்டிமன்றத்தை தொடங்கி வைத்து பேசியது கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு .க. ஸ்டாலின் அவர்கள் மக்கள் நல பணிகளை தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள். இரண்டு ஆண்டு கால ஆட்சியில் எண்ணற்ற மக்கள் நல திட்ட பணிகளை நிறைவேற்றி மக்களின் பேராதரவை பெற்றுள்ளது திராவிட மாடல் அரசு.

இந்த மக்கள் ஆதரவை பொறுத்துக் கொள்ள முடியாமல் கழகத்தின் மீதும், கழக ஆட்சியின் மீதும் அவதூறுகளையும் அள்ளி வீசி வருகின்றனர்.

எங்கள் ஊரில் டிக்கெட் பரிசோதகர் ஒருவர் இருந்தார். பேருந்தில் டிக்கெட் எடுப்பவர்களையும் சந்தேகப்பட்டு சோதனை நடத்துவார். ஒரு நாள் பேருந்தில் இருந்து இறங்கி ஒருவர் வேகமாக திருமண மண்டபத்துக்குள் ஓடினார் . அவரை விடாமல் துரத்தி சென்ற பரிசோதகர் அங்கு அவர் மணமேடையில் இருப்பதை பார்த்தார்.எனினும் எடு டிக்கெட்டை என கேட்டார். அவரும் பையில் இருந்து டிக்கெட் எடுத்து கொடுத்தார். பிறகு ஏன் ஓடி வந்தீர்கள் என கேட்டபோது நான் தான் மணமகன் முகூர்த்தம் முடிவதற்குள் வர வேண்டும் என்றார். அதைப்போல இன்றைக்கு ரைடு நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் அஞ்சாமல் அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்கள் எத்தனை சோதனைகளை நடத்தினாலும் இந்த இயக்கத்தையும் ஆட்சியையும் அசைக்க முடியாது என சோதனை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே கூறினார். வருமான வரித்துறை அமலாக்கத்துறை சிபிஐ போன்றவற்றை வேண்டாதவர்கள் மீது ஏவி விட்டுள்ளார்கள் என நமது தலைவரும் முதல்வருமான தளபதி அவர்கள் கண்டனத்தை தெரிவித்தார்கள். கரூரில் பழி வாங்கும் நோக்கில் அதிகாரிகளை ஏவி விட்டு சோதனை நடத்தி இருக்கிறார்கள். எத்தனை அவதூறுகளை பரப்பினாலும் எத்தனை சோதனைகளை நடத்தினாலும் இந்த இயக்கத்தையோ ஆட்சியையோ அசைக்க முடியாது.அது எடுபடாது என்றார்.

கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் கே.சி. பழனிசாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே. மணி, சட்டமன்ற உறுப்பினர்கள் பிஆர். இளங்கோ, க. சிவகாமசுந்தரி, மாநில நிர்வாகிகள் கரூர் முரளி, முனவர் ஜான், வே.பல்லவி ராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ. ராமர், பி விஜயகுமார், கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மாவட்ட கழக நிர்வாகிகள் டி. ராஜேந்திரன், எம்எஸ். கருணாநிதி, பூவை ரமேஷ் பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, வி.பாரத், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் குளித்தலை ஏ. சிவராமன், சுப ராஜகோபால், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம் துரைராஜ், சாலை கே. சுப்பிரமணி, என் செல்வராஜ், கரூர் மாநகர செயலாளர் எஸ் பி கனகராஜ், பகுதி கழகச் செயலாளர்கள் கரூர் கணேசன், கே. சுப்பிரமணியன், கா அன்பரசன், கோல்ட் ஸ்பாட் ஆர் எஸ். ராஜா, ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம் எஸ் .மணியன், கே. கருணாநிதி, எம். ரகுநாதன், அ. சந்திரன், கே ரவி ராஜா, ஜி. அண்ணாதுரை, கே. பாஸ்கரன், எம் ராமலிங்கம், எஸ் சுதாகர், என் மணிகண்டன், கார்த்திக், சி.வளர்மதி, எல் கரிகாலன், ப. தியாக ராஜன், ப. முத்துக்குமார், வி கே வேலுச்சாமி. சி கதிரவன், வாசிம் ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள்என்.எஸ் அனுமுகம், ,வி. கருப்பண்ணன், கே வேலுச்சாமி, விகேடி. ராஜ்கண்ணு,கே. சாமிநாதன்,சி. கருப்பையா, பி. சரவணன், எஸ் காளியப்பன், எம். சிவசாமி, ஏ. நஞ்சுண்டேஸ்வரன், என். ராமலிங்கம், சிவகாமசுந்தரி, பிரகுமார், பேரூர் கழக செயலாளர்கள் கே.அம்மையப்பன், கே.முரளிராஜா, இ. ரவிந்திரன், ஆர், மோகன்ராஜ், எம். சிகுமார், எம் முத்து, சி .தங்கராஜ், அணி அமைப்பாளர்கள் எஸ். சக்திவேல், பாலச்சந்திரன், ஜிம் எம் சிவா, கலாவதி சக்திவேல், ஜே பிரின்சி, இரா குடியரசு, பழ அப்பாசாமி, தென்னிலை பாலு, பி சங்கர், புலவர் அருணா பொன்னுசாமி, பாக்கிய ரகுபதி, ஆர் ஜோதிபாசு, பி மோகன சுப்பு, சி நவாஸ் கான், ம. அம்பிகாபதி, தம்பி சுதாகர், விஆர். அண்ணாவேலு, குளித்தலை நகர் மன்ற தலைவர் சகுந்தலா பல்லவி ராஜா, மாவட்ட ஊராட்சி குழுத் துணை தலைவர் தேன்மொழி தியாகராஜன், ஒன்றிய குழு தலைவர்கள் சிவகாமி வேலுச்சாமி, வள்ளியத்தாள் குருசாமி, சுமித்ரா தேவி ரவி ராஜா, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் அலமேலு மனோகரன், ஏ.கண்ணையன், நந்தினி தமிழ் செல்வன், நல்லமுத்து வடிவேல், பேரூராட்சி தலைவர்கள் எம். ஜெயந்தி, மு ரூபா, எஸ். புவனேஸ்வரி, டி. திவ்யா, எம். சௌந்தரபிரியா, சேது மணி மகாலிங்கம், சு. சகுந்தலா, எஸ் ராஜேஸ்வரி, முன்னாள் செயற்குழு உறுப்பினர் புகழேந்தி, குளித்தலை நகரக் கழக நிர்வாகிகள் கேஎம் எஸ் சாகுல் ஹமீது, க வடிவேல், கேஎம்.செந்தில் குமார்,ராணி முருகேசன், நா தமிழரசன், இரா. மாணிக்கம், குளித்தலை நகர வார்டு கழக செயலாளர்கள் வி. பிரதீபன், கே. குப்புசாமி, ச. பொன்னர்,க. செந்தில்குமார், ரா. செல்வம், பெ. ஆனந்தகுமார், சோ கமலக்கண்ணன், பெ. மாரிமுத்து, சா. தாமோதரன், ந. ஆனந்த், சாகுல்அம்து சேட், ரா.சாம் ஜோயல், சி சரவணன், க. பாஸ்கர், ச. அண்ணாதுரை, அ.சுரேஸ், செ. தயால்ராஜ், 18வதுவார்டு ச.அண்ணாதுரை, க. மனோகரன், பி. சக்திவேல், ச. கந்தசாமி, ஆ. சதீஷ்குமார், ம.சீதரன், ம.சரவணன், குளித்தலை நகர் மன்ற உறுப்பினர்கள் கண்ணகி வீரமலை, கு.சந்துரு, ப.பிச்சை, சரோஜா முத்துசாமி, இரா வெற்றிவேல், கே சையது உசேன், ஷகிலா பானு, ஜெய்சங்கர், சமீமா ஜாபருல்லா, விபி சந்திரசேகர், சாந்தி அண்ணாதுரை, ஜெயந்தி வடிவேல், ஆனந்த லட்சுமி செந்தில்குமார், மஞ்சு கணேஷ், கீதா பாலசுப்பிரமணியன், சுகன்யா நவீன் பாரத் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு செஞ்சிஅரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் அணிவித்தார். உடன் செஞ்சி ஒன்றிய சேர்மன் விஜயகுமார், பேரூராட்சி சேர்மன் மொகத்தியர் அலிமஸ்தான், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை உள்ளனர்.

சைதை மேற்கு 139 அ வட்டத்தில் சை.மு.சேகர் தலைமையில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் விழா!

## கழக கொடியேற்றி இனிப்பு - மோர் - குளிர்பானம் - உணவு வழங்கப்பட்டது.

சென்னை, ஜூன் 7 - மாவட்ட செயலாளர் அமைச்சர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தலின்படி பகுதி செயலாளர். மண்டலக்குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி ஆலோசனைக் கிணங்க சைதை மேற்கு பகுதி 139 அ வட்டக்கிளையின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 100 வது பிறந்த நாள் விழா வி.எஸ்.முதலி தோட்டத்தெரு, ராகவன் காலனி 4வது தெரு சந்திப்பில் வட்ட செயலாளர். சை.மு.சேகர் தலைமையில் டி.என்.சிவமணி,இ.வரதன், மா.ஏழுமலை, சுமதி தீனதயாளன், பூபதி.வெங்கடேசன், முன்னிலையில் பகுதி அவைத் தலைவர் களக்காடி எல்லப்பன் கழகக்கொடி யேற்றி, பொதுமக்களுக்கு உணவு வழங்கினார். மற்றும் வட்டத்தில் பின்வரும் பகுதிகளில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருவுருவப் படம் வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தி கழகக் கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு, மோர் குளிர்பானங்கள் வழங்கப் பட்டது.

இந்நிகழ்ச்சிகளில் ப.எழிலரசன் , ஜெ.தமிழ்ச்செல்வன் , ஜி.நாகதேவி, ஆர். ஞானவேல், கோ. பூ.பாஸ்கர் இ.வ.ரகுபதி , மா.ஏழுமலை த.சேகர், பூபதி.வெங்கடேசன், கொடி.து. சுரேஷ்பாபு, மு.மூர்த்தி ஜி.ரஞ்சித் உ.மகேஷ், து.மா.பொ.சி , டி.தினேஷ் குமார், எஸ்.தீபக், வி.ஆதி கேசவன் , ஜி.ஏழுமலை, என் . தீனதயாளன் , போட்டோ.ரவி, வி.வெங்கடேசன் ஆகியோரது ஏற்பாட்டில் ஆங்காங்கே அவரவர் பகுதிகளில் கழகக் கொடி ஏற்றியும் இனிப்பு , மோர், குளிர்பானங்கள் வழங்கப்பட்டது.

மேற்கூறிய நிகழ்ச்சிகளில் எஸ்.சாந்திசுந்தரம்,வெ.புருசோத்தமன், நியுகாலனி சம்பத், என்.சண்முகம், சார்ப். சரவணன், டி.கோபாலகிருஷ்ணன், எஸ்.முகமது அலி, பா.மோ.கார்த்திக்,எஸ். விஜயா, சைதை.ஆர்.சத்யா, ஆர்.பெருமாள், என். ரமேஷ், வி.வாசுதேவன், எஸ்.கண்ணன், ஆர்.தாமோதரன், ப.சிவகுமார்,சையத் ஜலால், துளசி சந்திரசேகர், ஆட்டோ.சேகர், தோட்டம்.ஆர்.ஜவகர்,த.வின்சென்ட், ப.தினகரன்,பா. முருகன், எம்.வினோத் கண்ணா,பி.ராமதாஸ், கே.பாரி,ஜோ.அந்தோணி, சைதை.மு.கார்த்திக், கே. வெங்கடேசன்,கோ.லட்சுமணன், து.வடிவேலன், கா.மூர்த்தி, து.வினோத்குமார், எஸ்.முருகன், ப. மோகன்,எஸ்.வி.நட்டார், எம்.வேலு,ஆர்.கன்னியப்பன், எச்.சுந்தர்,எஸ்.ராஜேந்திரன், கே.ரத்தினசபாபதி,சி. மதியழகன், ஜி.சீனி வாசன், டி.முருகன், கமல், சக்திவேல்,கே.வேலாயுதம், எம். சதீஷ்,பா.மோகன், இ.ராதாகிருஷ்ணன், சி.சந்துரு,மூ. கௌதம், ஆர். சுரேஷ் ,தினேஷ்,டி.பிரவீன்,கே. பி.சிவா, பி.பாலு,தீ.உதயசூரியன் ஜெ.வெங்கடேசன், ஜி.வெற்றிவேல், ம.வெங்கடேஷ், டி.குப்பன், எம். சேகர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி பேம்பாட்டு நிதியிலிருந்து அமைக்கப்பட்டுள்ள சூரிய ஒளி மின்சக்தி மூலம் செயல்படும் நவீன வசதிகளுடன் கூடிய குளிர்சாதன இரண்டடுக்கு பேருந்து நிழற்கூடத்தினை தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.டி.என்.வி.எஸ்.செந்தில்குமார் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி திறந்து வைத்தார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ந.ஸ்டீபன் ஜேசுபாதம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி.வெ.தீபனாவிஸ்வேஸ்வரி, தருமபுரி மின்வாரிய கண்காணிப்பு பொறியாளர்அ.செவ்வகுமார், தருமபுரி நகர்மன்றத்தலைவர் திருமதி.மா.லட்சுமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்பிரமணி, உட்பட தொடர்புடைய அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளனர்.